89597

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

5

**EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, AUGUST 2019**

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2019 ஓகஸ்ற்**

# வினாத்தாள் I

**45 நிமிடம்**

சுட்டெண் :..................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ✳ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ✳ **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும்** உரிய **விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ✳ ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- ✳ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.


**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**


| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |


| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/I/T/CH |

[பக். 2 ஐப் பார்க்க

● **1, 2** ஆகிய வினாக்களில் உள்ள அடைப்புகளில் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.


1. 

(1)  (2)  (3) 

2. 

(1)  (2)  (3) 

● **3, 4** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து விடை தருக.

3. 


உரு A




உரு B

A, B ஆகிய இரு உருக்களுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன?

(1) 1 (2) 2 (3) 3

4. 

உரு C




உரு D


C, D ஆகிய இரு உருக்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை

(1) நான்கிலும் குறைவாகும். (2) நான்காகும். (3) நான்கிலும் கூடவாகும்.


5. கீழே தரப்பட்டுள்ள கோலம் தொடர்ந்து செல்லும்போது ஆறாம் இடத்தில் வரத்தக்க அட்டையைத் தெரிவுசெய்க.




1 2 3 4 5 ...........?...........
6



(1)



(2)



(3)

Department of Examinations Sri Lanka

[பக். 3 ஐப் பார்க்க

சுட்டெண் :..............................

6. கீழேயுள்ள உருக்கள் ஒவ்வொன்றிலும் மூன்று ஈர்க்குகள் உள்ளன. அவற்றின் முழு நீளத்தையும் அதே விதத்தில் பயன்படுத்தி ஒரு முக்கோணியை அமைக்கத்தக்க ஈர்க்குகள் உள்ள உரு யாது?



(1) (2) (3)


7. இவ்வினாத்தாளின் முதற் பக்கத்தில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்பச் சரியான கூற்று யாது?

(1) சுட்டெண்ணை இரு இடங்களில் எழுத வேண்டிய அதே வேளை விடை தருவதற்கு வழங்கப்படும் நேரம் ஒரு மணித்தியாலத்திலும் குறைவாகும்.

(2) சுட்டெண்ணை இரு இடங்களில் எழுத வேண்டிய அதே வேளை விடை தருவதற்கு வழங்கப்படும் நேரம் ஒரு மணித்தியாலத்திலும் கூடவாகும்.

(3) சுட்டெண்ணை மூன்று இடங்களில் எழுத வேண்டிய அதே வேளை விடை தருவதற்கு வழங்கப்படும் நேரம் ஒரு மணித்தியாலத்திலும் குறைவாகும்.

8. ஒரு புத்தகத்தின் இரு பக்கங்களில் எழுத்துகள் ஒரு குறித்த விதத்தில் இருப்பதை உரு காட்டுகிறது. அதனை இனங்கண்டு அதே விதத்தில் எழுத்துகள் இருக்கும் பக்கங்களைக் காட்டும் உருவைத் தெரிவுசெய்க.




(1) (2) (3)

Department of Examinations - Sri Lanka

- பின்வரும் கவிதையை வாசித்து **9, 10** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு; நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே

9. இக்கவிதை தரும் **முக்கியமான** செய்தி யாது?

(1) சுத்தம் பேணுதல் வேண்டும்

(2) எங்கும் சுத்தம் உண்டு

(3) ஆயுளைப் பேணுதல் வேண்டும்

10. கவிதையில் உள்ள கருத்துகள் சரியான ஒழுங்குமுறையில் காட்டப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) சுத்தத்தைப் பேணுதல் வேண்டும் ⟶ சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும் ⟶ சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும்

(2) சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும் ⟶ சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும் ⟶ சுத்தத்தைப் பேணுதல் வேண்டும்

(3) சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும் ⟶ சுத்தத்தைப் பேணுதல் வேண்டும் ⟶ சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும்

11. இருளிலே இல்லாது ஒளியில் மட்டுமே
என் கூடச் சேர்ந்து வரும் எனது நண்பன்
இதில் குறிப்பிடப்படுவது

(1) சினேகிதன் பற்றி (2) நிழல் பற்றி (3) சூரியன் பற்றி

● கதை ஒன்றின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் இடம்பெறும் பகுதியைத் தெரிவு செய்க.

**12.** சிட்டுக் குருவியும் தேனீயும் காட்டில் உள்ள இரு நெருங்கிய நண்பர்களாவர். ஒரு நாள் ஆற்றின் அருகே உள்ள ( ...................... ) கிளையில் இருந்த சிட்டுக் குருவி நண்பன் நீரில் அடித்துச் செல்லப்படுவதைக் கண்டது. ( ...................... ) விரைவாகச் சொண்டினால் மரத்தின் ஓர் இலையைப் பிடுங்கியது. அதனைத் ( ...................... ) அருகில் போட்டது. நீரில் போடப்பட்ட இலை மீது தேனீ ஏறிக்கொண்டது. சிறிது நேரத்தில் சிறகடித்துக்கொண்டு பறந்து சென்றது.

(1) ஒரு மரத்தின் / தேனீக்கு / சிட்டுக் குருவி

(2) கரையில் / சிட்டுக் குருவி / தேனீக்கு

(3) ஒரு மரத்தின் / சிட்டுக் குருவி / தேனீக்கு

● பின்வரும் அட்டவணையைப் பார்க்க.

| | முதலாம் நிரல் | இரண்டாம் நிரல் | மூன்றாம் நிரல் |
|---|---|---|---|
| முதலாம் நிரை → | A | B | C |
| இரண்டாம் நிரை → | F | E | D |
| மூன்றாம் நிரை → | G | H | I |

கீழேயுள்ள படிமுறை 1 இலும் படிமுறை 2 இலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அட்டவணை மாற்றப்படுகின்றது. அதனைப் பயன்படுத்தி **13, 14** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

படிமுறை 1 - முதலாம் நிரை இருக்கும் இடத்திற்கு இரண்டாம் நிரையையும் இரண்டாம் நிரை இருந்த இடத்திற்கு முதலாம் நிரையையும் மாற்றல்.

படிமுறை 2 - இரண்டாம் நிரல் இருக்கும் இடத்திற்கு மூன்றாம் நிரலையும் மூன்றாம் நிரல் இருந்த இடத்திற்கு இரண்டாம் நிரலையும் மாற்றல்.


**13.** மாற்றங்களைச் செய்ததன் பின்னர் அட்டவணையின் நடு அடைப்பில் இருக்கும் எழுத்து யாது?


(1) B (2) C (3) D

**14.** ஆரம்பத்தில் இருந்த அட்டவணையில் எழுத்து I இருந்த இடத்திற்கு மாற்றங்களைச் செய்த பின்னர் வரும் எழுத்து யாது?


(1) H (2) G (3) D

**15.** உருவில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.






(1)



(2)



(3)

Department of Examinations - Sri Lanka

[பக். 5 ஐப் பார்க்க

**16.** குறியீடு ✱ ஐ இரு தடவைகளும் குறியீடு ☆ ஐ ஒரு தடவையும் பயன்படுத்தி எண் 343 எழுதப்பட்டிருந்தது. 343 உடன் 100 இனைக் கூட்டும்போது கிடைக்கும் எண்ணைக் காட்டும் விடை யாது?

(1) ✱ ✱ ☆　　(2) ☆ ☆ ✱　　(3) ☆ ✱ ☆


**17.** கடதாசித் துண்டு A | △ | ○ | # | □ |　　கடதாசித் துண்டு B | ⊕ | ✡ |

கடதாசித் துண்டு A இல் இருக்கும் குறியீடு # மீது கடதாசித் துண்டு B இல் இருக்கும் குறியீடு ✡ இருக்குமாறு கடதாசித் துண்டு A மீது கடதாசித் துண்டு B ஐ வைக்கும்போது காணத்தக்க உரு யாது?

(1) | △ | ⊕ | ✡ | □ |　　(2) | △ | ○ | ✡ | □ |　　(3) | ⊕ | ✡ | # | □ |


- **18, 19** ஆகிய வினாக்களில் இருக்கும் வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

**18.**



(1) 　　(2) 　　(3) 

**19.**



(1) 　　(2) 　　(3) 

Department of Examinations - Sri Lanka

**20.** சங்கர் ஓர் ஏணியின் நான்காம் படியின் மீது நிற்கின்றான். மேலும் மூன்று படிகள் ஏறும்போது அவன் ஏணியின் நடுவில் உள்ள படியை வந்து சேருவான். ஏணியில் உள்ள படிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 10　　(2) 13　　(3) 14

**21.** ஒரு பிள்ளை வேறு நான்கு பிள்ளைகளை ஓர் ஆற்றின் அக்கரைக்குக் கொண்டு சென்று, அவர்கள் எல்லோரையும் அங்கு இருக்கும் ஒரு பிள்ளையுடன் நிறுத்தி வைத்தபின் மீண்டும் இக்கரைக்கு வந்து மேலும் மூன்று பிள்ளைகளுடன் அக்கரையில் இருக்கும் பிள்ளைகளுக்கு அருகில் சென்றான். இப்போது அக்கரையில் இருக்கும் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 7　　(2) 8　　(3) 9

**22.** நிமலன் பிறக்கும்போது அவனுடைய தாயாரின் வயது 25 ஆகும். நிமலனின் தம்பி பிறக்கும்போது தாயாரின் வயது 29 ஆகும். நிமலனின் தற்போதைய வயது 10 எனின், அவனுடைய தம்பியின் தற்போதைய வயது யாது?


(1) 4　　(2) 5　　(3) 6

[பக். 6 ஐப் பார்க்க



**23.** "ஐந்து நாட்களிலும் பாடசாலை நடைபெறும் ஒரு வாரத்தில் அடுத்துவரும் மூன்று நாட்களில் மோகனால் பாடசாலைக்கு வரமுடியவில்லை." இக்கூற்றுக்கேற்ப மோகன் சந்தேகமின்றிப் பாடசாலைக்கு **வராத** ஒரு நாள்

(1) புதன்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை


**24.**



இந்த உருவைத் தடித்த கோடுகள் வழியே குறியீடு ● வெளியே இருக்குமாறு மடித்து ஒரு நான்முகி செய்யப்பட்டது. அந்நான்முகியைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

**25.**




இவ்வுருவில் காணத்தக்க சதுரங்களின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 8 (3) 10

**26.** மூன்று நபர்களின் பெயர்கள் ஆங்கில எழுத்துகளைப் பயன்படுத்திக் குறியீட்டுமுறையாக BEAT, NEAT, SEAT என எழுதப்பட்டிருந்தன. இம்மூன்று நபர்களினதும் பெயர்கள் சரியாக எழுதப்பட்டுள்ள விடை யாது?

(1) பரதன், வரதன், கந்தன் (2) அருணன், வருணன், கருணன் (3) மகேசன், சபேசன், கணேசன்

**27.**




உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையில் உள்ளது. அதற்கேற்ப ■ இற்குச் சமன்

(1) ▲● (2) ▲▲ (3) ▲▲●

**28.** உரு B இலுள்ள வடிவத்தின் எத்தனை வெவ்வேறு அமைவுகள் உரு A இல் உள்ளன?

உரு A



உரு B



(1) 6 (2) 3 (3) 1

**29.** ஒரு வினாவிடைப் போட்டியில் ஐந்து வினாக்கள் கேட்கப்பட்டன. முதலாம் வினாவிற்கு 1 புள்ளியும் இரண்டாம் வினாவிற்கு 2 புள்ளிகளும் மூன்றாம் வினாவிற்கு 3 புள்ளிகளும் நான்காம் வினாவிற்கு 4 புள்ளிகளும் ஐந்தாம் வினாவிற்கு 5 புள்ளிகளும் வழங்கப்பட்டன. 13 புள்ளிகளைப் பெற்ற ஒரு மாணவன் எத்தனையாம் வினாவிற்குச் சரியாக விடை தர **முடியாமல்** இருந்தது?

(1) முதலாம் (2) இரண்டாம் (3) மூன்றாம்


**30.** "எனக்கு ஓர் அண்ணனும் ஓர் அக்காவும் மாத்திரம் உள்ளனர். எமது அம்மாவுக்கு ஒரு மகனும் இரு மகள்மாரும் உள்ளனர்" என்று ஒரு பிள்ளை கூறுகின்றது. இதற்கேற்ப இப்பிள்ளை அக்குடும்பத்தில்

(1) மூத்த மகள் ஆவாள்.
(2) இளைய மகள் ஆவாள்.
(3) இளைய மகன் ஆவான்.

Department of Examinations - Sri Lanka

[பக். 7 ஐப் பார்க்க

**31.** விலங்குகள், பறவைகள், மைனா, முயல் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புடைமை பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.



○ இன் மூலம் வகைகுறிக்கப்படுவது

(1) முயல் (2) மைனா (3) பறவைகள்

**32.** ஒரு நிகழ்வின் மூன்று சந்தர்ப்பங்கள் சரியான ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) விளங்கிக்கொள்ளல் ⟶ பாடத்தை வாசித்தல் ⟶ விளக்குதல்
(2) கதவை மூடுதல் ⟶ பூட்டுதல் ⟶ நித்திரை செய்தல்
(3) காற்று வீசுதல் ⟶ குளிர்ச்சியை உணருதல் ⟶ வெப்பம் குறைதல்

**33.** ஒரு தோட்டத்தில் உள்ள மாமரங்கள், கொய்யா மரங்கள், றம்புட்டான் மரங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கைகள் ஒன்றுக்கொன்று சமமாகும். அதில் உள்ள தென்னைகளின் எண்ணிக்கை மாமரங்கள், கொய்யா மரங்கள், றம்புட்டான் மரங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கைகளின் மொத்தத்திற்குச் சமமாகும். இத்தகவல்கள் எண்ணிக்கைக்கு ஏற்பக் காட்டப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| தென்னை | றம்புட்டான் |
| கொய்யா | மாமரம் |

(1)

| | | |
|---|---|---|
| மாமரம் | கொய்யா | றம்புட்டான் |
| தென்னை | | |

(2)

| | | |
|---|---|---|
| தென்னை | | |
| மாமரம் | கொய்யா | றம்புட்டான் |

(3)


**34.** ஒரு வகுப்பில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையினதும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையினதும் மொத்தம் அவ்வகுப்பில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் இருமடங்காகும். இதற்கேற்பச் சரியான கூற்று யாது?

(1) ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடியது.
(2) பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடியது.
(3) ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் சமம்.

**35.** ஒரு சமதள நிலத்தில் நிமலன் விமலனுக்கு 20 மீற்றர் கிழக்கே நிற்கின்றான். நிமலனை நோக்கி விமலன் செல்லத் தொடங்கும் கணத்தில் நிமலன் விமலனின் கதியின் இரு மடங்கான கதியில் கிழக்கு நோக்கிச் செல்கின்றான். விமலன் 10 மீற்றர் தூரம் நிமலனை நோக்கிச் சென்றபோது இருவருக்குமிடையே உள்ள தூரம் எத்தனை மீற்றர்?

(1) 10 (2) 20 (3) 30


**36.** பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்திற்கேற்ப அடைப்பு ? உடன் பொருந்தும் எண்ணைத் தெரிவுசெய்க.




(1) 4 (2) 6 (3) 8

Department of Examinations - Sri Lanka


[பக். 8 ஐப் பார்க்க

**37.** 

உருவில் ஒத்த மரக் குற்றிகள் சிலவற்றைப் பயன்படுத்தி உருவாக்கிய அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மரக் குற்றிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 8 (3) 10

**38.** நீரின் வெவ்வேறு கனவளவுகள் உள்ள மூன்று ஒத்த பாத்திரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.





மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரின் கனவளவுகளைச் சமப்படுத்துவதற்குப் பின்பற்றத்தக்க **விரைவானதும் இலகுவானதுமான** நடைமுறை யாது?

(1) பாத்திரம் A இலிருந்து பாத்திரம் C இற்கு நீரை இட்டு இரு பாத்திரங்களிலும் உள்ள நீர்க் கனவளவுகளைச் சமப்படுத்தல்.

(2) பாத்திரம் C இன் நீர்க் கனவளவுக்குச் சமமாக இருக்குமாறு A, B ஆகிய பாத்திரங்களிலிருந்து நீரை வெளியேற்றல்.

(3) மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரை ஒரு பெரிய பாத்திரத்தில் இட்டு மறுபடியும் A, B, C ஆகிய மூன்று பாத்திரங்களிலும் சமமாக இடுதல்.

- ஒரு பாடசாலை நிலத்தின் பரும்படிக் கிடைப்படம் கீழே தரப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு **39, 40** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




**39.** மேற்குறித்த கிடைப்படத்துக்கேற்பச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) பிரதான கதவுக்கு வடக்கே நூலகமும் பிரதான மண்டபத்திற்கு மேற்கே விளையாட்டு மைதானமும் அமைந்துள்ளன.

(2) அலுவலகத்திற்குத் தெற்கே பிரதான மண்டபமும் பிரதான மண்டபத்திற்குக் கிழக்கே நூலகமும் அமைந்துள்ளன.

(3) விளையாட்டு மைதானத்திற்கு மேற்கே பிரதான கதவும் உணவகத்திற்குக் கிழக்கே அலுவலகமும் அமைந்துள்ளன.

**40.** இங்கு உள்ள பிரதான மண்டபத்திலிருந்து நூலகத்திற்குச் செல்லும் ஒருவர் தமது வலக் கைப் பக்கத்திலே முதலாவதாகக் காணத்தக்கது

(1) விளையாட்டு மைதானத்தை

(2) பிரதான மண்டபத்தை

(3) அலுவலகத்தை





* * *

Department of Examinations - Sri Lanka

**விசேட அறிவுறுத்தல்:**

வினாக்களுக்குரிய சரியான விடையையோ அல்லது அதன் இலக்கத்தையோ விடையின் பகுதியையோ தெரிவுசெய்து அதன் கீழ் கோடிட்டு அல்லது வட்டமிட்டு அடையாளமிட்டிருப்பின் போதுமானதெனக் கொள்க. விடை எழுத்தில் எழுதப்பட்டிருப்பின் சரியெனக் கொள்ள வேண்டாம்.

## பகுதி I

| வினா இல. | விடை இல. | விடை |
|---|---|---|
| 01. | (3) |  |
| 02. | (2) |  |
| 03. | (3) | 3 |
| 04. | (2) | நான்காகும். |
| 05. | (2) |  |
| 06. | (1) |  |
| 07. | (1) | சுட்டெண்ணை இரு இடங்களில் எழுத வேண்டிய அதே வேளை விடை தருவதற்கு வழங்கப்படும் நேரம் ஒரு மணித்தியாலயத்திலும் குறைவாகும். |
| 08. | (3) |   |
| 09. | (1) | சுத்தம் பேணுதல் வேண்டும். |
| 10. | (3) | சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும் ⟶ சுத்தத்தைப் பேணுதல் வேண்டும் ⟶ சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும். |
| 11. | (2) | நிழல் பற்றி |
| 12. | (3) |   |
| 13. | (2) | C |
| 14. | (1) | H |
| 15. | (1) |  |
| 16. | (2) | ☆ ☆ ✱ |
| 17. | (1) | △ ⊕ ✡ □ |

Department of Examinations - Sri Lanka

| வினா இல. | விடை இல. | விடை |
|---|---|---|
| 18. | (3) | =‖= |
| 19. | (1) |  |
| 20. | (2) | 13 |
| 21. | (3) | 9 |
| 22. | (3) | 6 |
| 23. | (1) | புதன்கிழமை |
| 24. | (1) |  |
| 25. | (3) | 10 |
| 26. | (2) | அருணன், வருணன், கருணன் |
| 27. | (2) | ▲▲ |
| 28. | (1) | 6 |
| 29. | (2) | இரண்டாம் |
| 30. | (2) | இளைய மகள் ஆவாள் |
| 31. | (1) | முயல் |
| 32. | (2) | கதவை மூடுதல் ⟶ பூட்டுதல் ⟶ நித்திரை செய்தல் |
| 33. | (2) | மாமரம் \| கொய்யா \| ரம்புட்டான்<br>தென்னை |
| 34. | (3) | ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் சமம் |
| 35. | (3) | 30 |
| 36. | (2) | 6 |
| 37. | (3) | 10 |
| 38. | (1) | பாத்திரம் A இலிருந்து பாத்திரம் C இற்கு நீரை இட்டு இரு பாத்திரங்களிலும் உள்ள நீர்க் கனவளவுகளைச் சமப்படுத்தல். |
| 39. | (2) | அலுவலகத்திற்குத் தெற்கே பிரதான மண்டபமும் பிரதான மண்டபத்திற்குக் கிழக்கே நூலகமும் அமைந்துள்ளன. |
| 40. | (1) | விளையாட்டு மைதானத்தை |

Department of Examinations - Sri Lanka

89790

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, AUGUST 2019

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2019 ஓகஸ்ற்

# வினாத்தாள் II

**1 மணித்தியாலம் 15 நிமிடம்**

சுட்டெண் :................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ✳ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ✳ **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- ✳ **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ✳ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ✳ விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- ✳ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations – Sri Lanka

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

கானகமெங்கும் சூழ்ந்துள்ள அமைதியைப் பறவைகளின் நாதம் கலைக்கின்றது. அங்குமிங்கும் செல்லும் மயில்களால் கானகம் வண்ணமயமாகின்றது. சுற்றுப்புறத்தை அவதானித்து மிகக் கவனமாகச் செல்லும் மான் கூட்டம் குளக்கரையில் நீரைப் பருகுகின்றது. மரஞ்செடி கொடிகள் நிறைந்த சூழலைத் தழுவிச் செல்லும் தென்றல் உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது.

- **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) கானகத்தை வண்ணமயமாக்குவது எது? .......................................

(ii) இணைமொழி ஒன்றினைத் தருக. .......................................

(iii) 'காற்று' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. .......................................

(iv) கானகத்தில் சூழ்ந்துள்ள அமைதி கலையக் காரணம் யாது?

.......................................

(v) நீரைப் பருகும் மான்களின் இயல்பு எவ்வாறு விளக்கப்படுகின்றது?

.......................................

(vi) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

(அ) கானகத்தின் குளிர்ச்சி

(ஆ) கானகத்தின் அழகு

(இ) கானகத்தில் வாழும் பிராணிகள்

2. உயர்திணை, ஒருமை, பெண்பால், பெயர்ச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

மனிதன் சிறுவர் பெண்கள் சிங்கம் சிறுமி

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

நெடுகிலும் / தாவரங்களில் / வரம்பு / பூக்கள் / காணப்படுகின்றன / பூத்துக் / உள்ள

.......................................

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு **சரியாயின்** '✓' எனவும் **பிழையாயின்** '×' எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) மாணவர்கள் பாடசாலைச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கினர். (.........)

(ii) பறவைக் கூட்டம் பறந்து சென்றன. (.........)

(iii) தொழிலுக்காகப் பலர் தூர இடங்களுக்குச் செல்கின்றனர். (.........)

(iv) காற்று வேகமாக வீசியதால் மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசின. (.........)

5. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்

(ii) ஐயோ ஐயோ இப்படித் தவறான வேலைகளைச் செய்வது நல்லதல்ல

6. பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) எதையும் ஆராய்ந்து பார்க்காமல் செய்தல் கூடாது.

.......................................

(ii) வெறும் புத்தகப் படிப்பு வாழ்க்கைக்குப் பயனற்றது.

.......................................

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations - Sri Lanka

சுட்டெண் : ................................

**7.** பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

(i) விவசாயிகள் வயல்வெளியில் உள்ள மர நிழலில அமர்ந்தார்கள்.

..............................................................................................................

(ii) ஆசிரியர் எனக்குப் பரிசு குடுத்தார்.

..............................................................................................................

**8.** கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) பேரன் தாத்தாவின் மௌனத்தைக் ........................... (கலைத்தான். / களைத்தான்.)

(ii) அங்கிருந்து மீண்டும் எங்கள் ........................... (பயனத்தைத் / பயணத்தைத்) தொடர்ந்தோம்.

**9.** பின்வரும் வாக்கியத்தை இறந்த காலத்தில் எழுதுக.

காவியா நாட்டியம் ஆடுகிறாள்.

..............................................................................................................

**10.** எதிர்ச்சொல்லை எழுதுக.


மென்மை : ........................................

**11.** பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் **தமிழில்** எழுதுக.

(i) Hospital : .................................... (ii) Face : ........................................

**12.** பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)



..............................

(ii)



..............................

**13.** பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(i) This / car / is / small / a : ..............................................................................

(ii) are / They / fast / running / very : .......................................................................

**14.** 'பேர கஹ' எனும் சிங்களச் சொற்களுக்குரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

..............................................

**15.** பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் **தமிழ்** எழுத்துக்களில் எழுதுக.

கைகளை மேலே உயர்த்துங்கள் : ..............................................................................

**16.** 'இருபத்து ஆறாயிரத்து எண்பத்து ஏழு' எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக. : ..............................

**17.**

| | |
|---|---|
| 2 | 4 |
| 7 | 0 |

கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

: ..............................

[பக். 4 ஐப் பார்க்க


Department of Examinations - Sri Lanka

**18.** பின்வரும் எண்களுள் 7 எனும் இலக்கத்தினால் காட்டப்படும் பெறுமதி 700 ஆகவுள்ள எண் எது?

9270, 7028, 6753, 1467


:..........................

**19.** கீழே உருவில் காட்டப்பட்டுள்ள மரத்துண்டின் நீளம் எவ்வளவு?




: ....................cm

**20.** கீழே தரப்பட்டுள்ள செவ்வகத்தில் **இரண்டு** சமச்சீர்க்கோடுகள் வரைக.



**21.** பழ வியாபாரி ஒருவர், நான்கு வாரங்களில் விற்பனை செய்த அன்னாசிப்பழங்கள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| வாரம் | அன்னாசிப் பழங்களின் தொகை |
|---|---|
| முதலாம் | 1256 |
| இரண்டாம் | 1345 |
| மூன்றாம் | 1842 |
| நான்காம் | 2480 |

(i) முதலாம், இரண்டாம் வாரங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ள மொத்த அன்னாசிப்பழங்கள் எத்தனை?


: ..........................

(ii) மூன்றாம் வாரத்தைவிட நான்காம் வாரத்தில் எத்தனை அன்னாசிப்பழங்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளன?

: ..........................

**22.** சதுர சென்றிமீற்றர் சதுரக்கட்ட அமைப்பொன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. அதில் நிழற்றியுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்றிமீற்றர்?

: ..........................



**23.** பிற்பகல் 3.30 என்பது இருபத்து நான்கு மணிக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.

: ..........................

**24.** 3 kg 500 g பாசிப்பயற்றை, ஒரு பையில் 500 g வீதம் எத்தனை பைகளில் இடலாம்?

: ..........................

Department of Examinations - Sri Lanka

[பக். 5 ஐப் பார்க்க

**25.** ஒன்றின் விலை ரூபாய் 35.00 வீதம் 6 அப்பியாசப் புத்தகங்களை வாங்கிக்கொண்டு ரூபா. 500 நாணயத்தாளொன்றைக் கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

: ரூபாய் ......................

**26.** மயூரன் ஓர் இடத்திலிருந்து வடக்குத் திசையில் 5 m சென்று அவனது இடதுகைப்பக்கமாகத் திரும்பி, மேலும் 5 m சென்றான். அவ்விடத்திலிருந்து தெற்குத் திசையில் 5 m சென்றான் எனின், அவன் இப்போது பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து எந்தத் திசையில் உள்ளான்?


: ............................

**27.** 436 கேக் துண்டுகள் ஒரு பெட்டியில் நான்கு துண்டுகள் வீதம் பெட்டிகளில் இடப்பட்டன. கேக் துண்டுகள் இடப்பட்ட பெட்டிகள் எத்தனை?

: ............................

**28.** 12 லீற்றர் 500 மில்லி லீற்றர் நீர் நிரப்பக்கூடிய தொட்டியொன்றில் $\frac{1}{4}$ பகுதி வரை நீர் ஊற்றப்பட்டுள்ளது. அத்தொட்டியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?

: ..............l ..............ml

**29.** 


மாணவர் குழுவொன்று அதிகம் விரும்பும் மலர் வகைகள் பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.

(i) ரோசா மலரை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை, மல்லிகை மலரை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

: ............................

(ii) குழுவில் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?

: ............................

- இலக்கம் **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் **கீழ்க் கோடிடுக.**

**30.** வித்துக்கள் மூலம் கன்றுகளைப் பெறக்கூடிய தாவரம் எது?
(1) வத்தாளை (2) பீர்க்கு (3) இராசவள்ளி (4) மரவள்ளி

**31.** வயல்களில் உள்ள தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை இரையாகக் கொள்ளும் பிராணி எது?
(1) ஆந்தை (2) நத்தை (3) மண்புழு (4) வண்ணத்துப்பூச்சி

**32.** இலங்கை நாட்டிற்கே உரித்தான தாவரம் எது?
(1) பெரும்பிரம்பு (2) தேக்கு (3) பலா (4) வேம்பு

**33.** சக்தி தரும் உணவுக் கூட்டத்தில் அடங்கியுள்ள உணவு எது?
(1) பால் (2) பசளி (3) முட்டை (4) பலாக்காய்

**34.** சுவரோவியங்களுக்குப் பிரசித்தமான இடம் எது?
(1) இசுறுமுனிய (2) சிகிரியா (3) யாப்பகுவை (4) காலிக்கோட்டை

Department of Examinations - Sri Lanka

[பக். 6 ஐப் பார்க்க

**35.** ஈயின் மூலம் நோய்க் கிருமிகள் எமது உடலினுள் செல்வதால் ஏற்படும் நோய்

(1) கழிச்சல் நோய்
(2) கொள்ளை நோய்
(3) ஆனைக்கால் நோய்
(4) சிக்குன்குன்யா

**36.** முலையூட்டி வகைப் பிராணிகள் **மாத்திரம்** அடங்கியுள்ள தொகுதி எது?

(1) மரங்கொத்தி, மயில், மாடு
(2) முதலை, நரி, யானை
(3) ஆமை, புலி, கரடி
(4) மாடு, நரி, புலி

**37.** தியலுமை, கிரிகல்பொத்தை ஆகியன முறையே இலங்கையில் உள்ள,

(1) ஓர் ஆறும் ஒரு காடும் ஆகும்.
(2) ஒரு நீர்வீழ்ச்சியும் ஒரு மலையுமாகும்.
(3) ஒரு குளமும் ஒரு மலையும் ஆகும்.
(4) ஒரு நீர்வீழ்ச்சியும் ஓர் ஆறும் ஆகும்.

**38.** இலங்கை ஒரு தீவு எனக் கூறப்படுவதற்கான காரணம்

(1) ஒரு சிறிய நாடாக இருப்பதால்
(2) இந்தியாவுக்கு அருகே அமைந்திருப்பதால்
(3) நீரினால் சூழப்பட்டிருப்பதால்
(4) ஆறுகளின் நீர் கடலுக்குச் செல்வதால்

**39.** "நீராடுவது ஆபத்தானது" என குளமொன்றிற்கு அருகே அறிவித்தலொன்றைக் காட்சிப்படுத்துவதற்குக் காரணமாக இருக்க **முடியாதது** எது?

(1) நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்துதல்
(2) ஆழமானதாக இருத்தல்
(3) முதலைகள் இருத்தல்
(4) சேறு இருத்தல்

**40.** அம்பக்கை தேவாலயம் எது தொடர்பாகப் பிரசித்தி பெற்றுள்ளது?

(1) உருவச் சிலைகள்
(2) கற்செதுக்கல் வேலைப்பாடுகள்
(3) பொம்மலாட்டக் கலை
(4) மரச்செதுக்கல் வேலைப்பாடுகள்

**41.** பின்வருவனவற்றில் பனிக்கட்டியொன்றை நீரில் இட்டால் **நிகழாதது** எது?

(1) பனிக்கட்டி நீரில் கரைதல்
(2) பனிக்கட்டி நீரில் மிதத்தல்
(3) நீரின் நிறம் மாற்றமடைதல்
(4) நீர் குளிர்ச்சியடைதல்

**42.** நீரில் கொண்டிசுத் தூளை இட்டால் கிடைக்கும் திரவத்தின் நிறம் யாது?

(1) சிவப்பு (2) மஞ்சள் (3) ஊதா (4) பச்சை

**43.** தாவரங்களில் பிரதானமாகப் பின்வரும் எந்தப் பகுதியில் உணவு உற்பத்தி செய்யப்படும்?

(1) பூ (2) காய் (3) வேர் (4) இலை

**44.** உலர்த்துவதாலும் மணலில் புதைத்து வைப்பதாலும் நீண்ட காலம் வைத்திருக்கக் கூடிய உணவுப் பொருள் எது?

(1) எலுமிச்சம்பழம் (2) பிலிங்பழம் (3) புளியம்பழம் (4) கொறுக்காப்புளி

**45.** முலையூட்டிப் பிராணியொன்றினை இனங்காண்பதற்கான ஓர் இயல்பு எது?

(1) தாவரப் பகுதிகளை மாத்திரம் உணவாக உட்கொள்ளல்
(2) தாய் பாலூட்டிக் குட்டிகளை வளர்த்தல்
(3) முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தல்
(4) தரையில் மாத்திரம் காணப்படுதல்

Department of Examinations - Sri Lanka

[பக். 7 ஐப் பார்க்க

**46.** சில்லுவண்டி, பாக்கு வெட்டி ஆகியவற்றினால் செய்யப்படும் வேலைகள் முறையே எவை?

(1) பாரமான பொருள்களைக் கொண்டு செல்லல், போத்தல் மூடி திறத்தல்
(2) ஆணி கழற்றுதல், போத்தல் மூடி திறத்தல்
(3) பொருள்களைத் துண்டுகளாக்குதல், ஆணி கழற்றுதல்
(4) பாரமான பொருள்களைக் கொண்டு செல்லல், பொருள்களைத் துண்டுகளாக்குதல்

**47.** படத்தில் காட்டப்பட்டுள்ள குறியீட்டினால் கூறப்படும் தகவல் யாது?



(1) கவனமாகக் கையாள்க.
(2) நொருங்கக் கூடியது.
(3) உயரத்தில் வைக்குக.
(4) உடைந்து உள்ளது.

**48.** பயிர்ச்செய்கையைப் பாதுகாப்பதற்கு உதவும் இயற்கையான ஒரு செயல் யாது?

(1) பயிர் நிலத்தைச் சூழ தடிகளால் வேலி அமைத்தல்
(2) வெண்முட்டைப் பூச்சிகள் மீது சவர்க்கார நீரைத் தெளித்தல்
(3) நத்தைகளைச் செண்பகம் உணவாகக் கொள்ளல்
(4) வேப்பம் வித்துக்களை இடித்துத் தயாரித்த திரவத்தைத் தெளித்தல்

**49.** அரச இலச்சினையில் உள்ள குறியீடுகளில் **அடங்காதது** எது?

(1) தர்ம சக்கரம் (2) நிறைகுடம் (3) பூவிதழ்கள் (4) தென்னம் பூ

**50.** தாவரத்தில் உள்ள இலைகளைக் கொண்டு கூடு அமைத்துக்கொள்ளும் பிராணி எது?

(1) அணில் (2) முசிறு (3) காகம் (4) தூக்கணாங்குருவி


**51.** சமையலறையில் **பயன்படாத** ஓர் உபகரணம் எது?

(1) கத்தி (2) துருவலகு (3) அரிவாள் (4) உரல்

**52.** செவிப்புலன் மூலம் மாத்திரம் தகவல்களைப் பெறக்கூடிய இரண்டு தொடர்பாடல் ஊடகங்கள் எவை?

(1) தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை (2) வானொலி, ஒலிபெருக்கி
(3) செய்திப்பத்திரிகை, ஒலிபெருக்கி (4) வானொலி, தொலைக்காட்சி

**53.**



படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு **மிகப்** பொருத்தமானது?

(1) இரும்பு ஆணி அறைவதற்கு (2) திருகு ஆணி கழற்றுவதற்கு
(3) தகடு வெட்டுவதற்கு (4) தகட்டைத் துளைப்பதற்கு

**54.** பின்வருவனவற்றுள் தாவரத்திலிருந்து பெறப்படும் ஓர் உணவுப்பொருள் எது?

(1) வெண்ணெய் (2) சோயாப்பால்
(3) யோகட் (4) தயிர்

**55.** வகுப்பறையில் குழுவேலைகளைச் செய்யும்போது மாணவரிடம் இருக்க வேண்டிய ஒரு நல்ல பண்பு எது?

(1) இறுதி வரையில் வேலையில் ஈடுபடுதல்

(2) ஏனையோரைவிட முன்பதாகத் தமது வேலையை முடித்தல்

(3) தமது கருத்துக்களின்படி மாத்திரம் வேலைச் செய்தல்

(4) தமது வேலையில் மாத்திரம் கவனஞ் செலுத்துதல்


**56.** படத்தில் காட்டப்பட்டுள்ள தையல் எது?

(1) காம்புத் தையல்

(2) சங்கிலித் தையல்

(3) கம்பளித் தையல்

(4) நரம்புத் தையல்



**57.** பின்வருவனவற்றுள் இலங்கையின் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று

(1) கரப்பந்தாட்டம் (2) கரம்


(3) சடுகுடு (4) வலைப்பந்தாட்டம்

**58.** பின்வருவனவற்றுள் மண்ணில் உள்ள பொருள்களை அவதானிப்பதற்கு மிகப் பொருத்தமான உபகரணம் எது?


(1) ஊசித்துளைக் கமரா (2) திசைகாட்டி

(3) கைவில்லை (4) தொலைகாட்டி


**59.** வீட்டுத்தோட்டச் செய்கையின் போது பயன்படும் உபகரணத்தைக் காட்டும் படம் எது?




(1)



(2)



(3)



(4)

**60.** "நண்பன் செய்த உதவி எனக்கு இப்போதும் நினைவிருக்கின்றது." என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..............................................................................................................

..............................................................................................................

2. ..............................................................................................................

..............................................................................................................

3. ..............................................................................................................

..............................................................................................................


***

Department of Examinations - Sri Lanka

# பத்திரம் II
## புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 01. | (i) மயில் / மயில்கள் / அங்குமிங்கும் செல்லும் மயில்/ அங்குமிங்கும் செல்லும் மயில்கள் | 01 |
| | (ii) அங்குமிங்கும் | 01 |
| | (iii) தென்றல் | 01 |
| | (iv) பறவைகளின் நாதம் | 01 |
| | (v) சுற்றுப்புறத்தை அவதானித்து மிகக் கவனமாக செல்லும் / மிகக் கவனமாக / மிகக் கவனமாகச் செல்லும் | 01 |
| | (vi) ஆ) கானகத்தின் அழகு | 01 |
| 02. | சிறுமி | 01 |
| 03. | வரம்பு நெடுகிலும் உள்ள தாவரங்களில் பூக்கள் பூத்துக் காணப்படுகின்றன. | 01 |
| 04. | (i) ✓ | 01 |
| | (ii) x | 01 |
| | (iii) ✓ | 01 |
| | (iv) ✓ | 01 |
| 05. | (i) நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்? | 01 |
| | (ii) ஐயோ! ஐயோ! இப்படித் தவறான வேலைகளைச் செய்வது நல்லதல்ல. | 01 |
| 06. | (i) ஆழம் அறியாமல் காலை விடாதே. | 01 |
| | (ii) ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. | 01 |
| 07. | (i) விவசாயிகள் வயல்வெளியில் உள்ள மர <u>நிழலில்</u> அமர்ந்தார்கள். | 01 |
| | (ii) ஆசிரியர் எனக்குப் பரிசு <u>கொடு</u>த்தார். | 01 |
| 08. | (i) கலைத்தான் | 01 |
| | (ii) பயணத்தைத் | 01 |
| 09. | காவியா நாட்டியம் ஆடினாள். | 01 |
| 10. | வன்மை | 01 |
| 11. | (i) வைத்தியசாலை / ஆஸ்பத்திரி / மருத்துவமனை / ஆசுப்பத்திரி | 01 |
| | (ii) முகம் / வதனம் | 01 |

Department of Examinations - Sri Lanka

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 12. | (i) Train / TRAIN / train<br>(ii) Ice Cream / ICE CREAM | 01<br>01 |
| 13. | (i) This is a small car.<br>(ii) They are running very fast. | 01<br>01 |
| 14. | கொய்யா மரம் | 01 |
| 15. | அத் இஹலட்ட ஒசவன்ன / அத் இஹலட்ட உஸ்ஸன்ன /<br>அத் உடட்ட உஸ்ஸன்ன / அத் உடட்ட ஒசவன்ன | 01 |
| 16. | 26087 / 26 087 | 02 |
| 17. | 7420 / 7 420 | 02 |
| 18. | 6753 | 02 |
| 19. | 7 | 02 |
| 20. | <br>சமச்சீர் கோடுகள் புள்ளிக்கோட்டின் மூலம் காட்டப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக.<br>வெளியே சமச்சீர் கோடுகள் நீட்டப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக.<br>ஒரு சமச்சீர் கோடு சரியாக வரையப்பட்டிருப்பின் ஒரு புள்ளி (01) வழங்குக. | 02 |
| 21. | (i) 2601 / 2 601<br>(ii) 638 | 02<br>02 |
| 22. | 10 / 10 சதுர சென்ரிமீற்றர் / $10cm^2$ | 02 |
| 23. | 15 : 30 / 15 : 30 மணித்தியாலம் | 02 |
| 24. | 7 / ஏழு | 02 |
| 25. | 290.00 / 290/= / 290 | 02 |
| 26. | மேற்கு | 02 |
| 27. | 109 | 02 |



Department of Examinations - Sri Lanka

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 28. | 9*l* 375 *ml* | 02 |
| 29. | (i) 3<br>(ii) 40 | 02<br>02 |
| 30. | 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு .........................<br>(2) பீர்க்கு | 01 |
| 31. | (1) ஆந்தை | 01 |
| 32. | (1) பெரும்பிரம்பு | 01 |
| 33. | (4) பலாக்காய் | 01 |
| 34. | (2) சிகிரியா | 01 |
| 35. | (1) கழிச்சல் நோய் | 01 |
| 36. | (4) மாடு, நரி, புலி | 01 |
| 37. | (2) ஒரு நீர்வீழ்ச்சியும் ஒரு மலையுமாகும். | 01 |
| 38. | (3) நீரினால் சூழப்பட்டிருப்பதால் | 01 |
| 39. | (1) நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்துதல். | 01 |
| 40. | (4) மரச்செதுக்கல் வேலைப்பாடுகள் | 01 |
| 41. | (3) நீரின் நிறம் மாற்றமடைதல். | 01 |
| 42. | (3) ஊதா | 01 |
| 43. | (4) இலை | 01 |
| 44. | (1) எலுமிச்சம்பழம் | 01 |
| 45. | (2) தாய் பாலூட்டிக் குட்டிகளை வளர்த்தல். | 01 |
| 46. | (4) பாரமான பொருள்களைக் கொண்டு செல்லல், பொருள்களைத் துண்டுகளாக்குதல். | 01 |
| 47. | (2) நொருங்கக் கூடியது | 01 |

Department of Examinations - Sri Lanka

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 48. | (3) நத்தைகளைச் செண்பகம் உணவாகக் கொள்ளல். | 01 |
| 49. | (4) தென்னம் பூ | 01 |
| 50. | (2) முசிறு | 01 |
| 51. | (3) அரிவாள் | 01 |
| 52. | (2) வானொலி, ஒலிபெருக்கி | 01 |
| 53. | (2) திருகு ஆணி கழற்றுவதற்கு | 01 |
| 54. | (2) சோயாப்பால் | 01 |
| 55. | (1) இறுதி வரையில் வேலையில் ஈடுபடுதல் | 01 |
| 56. | (3) கம்பளித்தையல் | 01 |
| 57. | (3) சடுகுடு | 01 |
| 58. | (3) கைவில்லை | 01 |
| 59. | (3)  | 01 |
| 60. | சரியான 03 வாக்கியங்களுக்கு 02 x 03 புள்ளிகள்<br>**ஒவ்வொரு சரியான வாக்கியத்திற்கும் ( 02 ) புள்ளிகள் வீதம் வழங்குக.**<br>i. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.<br>ii. எல்லா வாக்கியங்களிலும் எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியானதாக இருத்தல் வேண்டும்.<br>iii. எழுத்துப் பிழைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.<br>iv. வழங்கப்பட்ட தலைப்புக்குப் பொருத்தமானதமாக எழுதப்பட்ட வாக்கியங்களாக அமைதல் வேண்டும்.<br>v. எழுத்து வழக்கில் அமைந்த வாக்கியங்களாக இருத்தல் வேண்டும்.<br>vi. வாக்கியத்தின் கருத்து தெளிவாக வெளிப்படல் வேண்டும்.<br>vii. ஒரே கருத்துடைய வாக்கியத்தை மீண்டும் எழுதியிருப்பின் புள்ளி வழங்க வேண்டாம். | 06<br><br>02 x 03 = 6 |

Department of Examinations - Sri Lanka

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| | ■ **வாக்கியத்திற்கு ஒரு புள்ளி வழங்குவதற்கான அறிவுறுத்தல்.**<br><br>வாக்கியமொன்றில் ஓர் எழுத்துப் பிழை மட்டும் இருப்பின் 01 புள்ளி மட்டும் வழங்குக. (ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகளிருப்பின் புள்ளி வழங்க வேண்டாம்.)<br><br>1 - 15 - 30 புள்ளிகள்<br>16 - 29 - 32 புள்ளிகள்<br>30 - 59 - 30 புள்ளிகள்<br>60 - 06 புள்ளிகள்<br>உறுப்பெழுத்து - 02 புள்ளிகள்<br>மொத்தப்புள்ளிகள் - 100 | |

Department of Examinations - Sri Lanka